**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

**தேதி 18.05.2025** **நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

ஐதராபாத்தில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி துயரம் வெளியிட்டுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கரின் பிறந்ததினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்

பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைக்க அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் 7 குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

தலைக்கப்பட்ட தொடக்க வேளாண் கடன் சங்கங்களை மீண்டும் உயிர்ப்பித்து கொள்கைக்கான திட்டங்களை மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித்ஷா அறிவித்துள்ளார்.

*பிரதமர் இரங்கல் (11)*

ஆந்திர மாநிலம் ஐதராபாத்தில் சார்மினா கட்டிடம் அருகே உள்ள குல்சார் ஹவுஸ் குடியிருப்பு பகுதியில் இன்று காலை ஏற்பட்ட தீ விபத்தில் 17 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்தனர். இறந்தவர்களில் 7 வயதிற்குட்பட்ட 8 குழந்தைகளும், 6 பெண்களும் அடங்குவர். ஐதராபாத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தமது ஊடக பதிவில் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு வருத்தம் தெரிவிப்பதாக கூறியுள்ளார். உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்தினருக்கும் தலா 2 லட்ச ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும் என்றும்,

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தன்கர் (13)

குடியரசு துணை தலைவர் திரு ஜக்திப் தன்கரின் பிறந்த நாளை ஒட்டி அவருக்கு குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில், தன்கர் மிகுந்த ஆரோக்கியத்துடனும், நாட்டிற்கு பல ஆண்டு சேவை புரிய வேண்டும் என்றும் வாழ்த்தியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், அரசியல் அமைப்பு சட்டம் குறித்த மகத்தான அறிவை திரு தன்கர் பெற்றுள்ளது, முன்னனி வழக்கறிஞராக அவர் பல ஆண்டுகள் பணியாற்றியதை வெளிப்படுத்துவதாகவும் கூறியுள்ளார். மாநிலங்களவையின் செயல்பாட்டை மேம்படுத்த திரு தன்கர் பாராட்டுதலுக்குரிய முயற்சிகளை மேற்கொள்வதாக பிரதமர் குறிப்பிட்டார்.

குழு 1 (16)

பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைக்க ஏதுவாக அனைத்து கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமையில் 7 குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது. இந்த குழுக்களானது இந்தியாவின் நட்பு நாடுகள் மற்றும் ஐநா பாதுகாப்பு உறுப்பு நாடுகளுக்கு இம்மாத இறுதியில் பயணிக்க உள்ளது. பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவு நடவடிக்கை குறித்து உலக நாடுகளுக்கு எடுத்துரைக்க பாஜக எம்பி ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான குழு பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, டென்மார்க் ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளது. திரு சசிதரூர் தலைமையிலான குழு அமெரிக்கா, பனாமா, கயானா, பிரேசில் மற்றும் கொலம்பியா நாடுகளுக்கு செல்ல உள்ளது. திமுக எம்பி திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர் ஸ்பெயின், க்ரீஸ், ஸ்லோவெனியா. லாட்வியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு செல்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்

திரு சுப்ரியா சுலே தலைமையிலான குழு எகிப்து, கத்தார், எத்தியோப்பியா, மற்றும் தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளது.

குழு 2(15)

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய பாஜக எம்பி திரு ரவிசங்கர் பிரசாத், பயங்கரவாதத்திற்கு எதிரான இந்த முயற்சி பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை பிரதிபலிப்பதாக கூறினார்.

மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு வழிநடத்துவதை பெருமையாக கருதுவதாக காங்கிரஸ் எம்பி திரு சசிதரூர் கூறியுள்ளார்.

இதுகுறித்து திமுக எம்பி திருமதி கனிமொழி வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், நமது நாட்டின் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவை வழி நடத்துவதில் பெருமைப்படுவதாக கூறியுள்ளார். நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் அரசியலமைப்பின் மதிப்புகளை காக்கும் வகையில் திமுக எப்போதும் ஒத்துழைப்பை வழங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதே போல் அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவிற்கு தலைமை வகிக்கும் பொறுப்பை வழங்கியதற்காக பிரதமர் மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ, மற்றும் வெளியுறவுத்

துறை அமைச்சர் டாக்டர ஜெய்சங்கர் ஆகியோருக்கு தேசிய வாத காங்கிரஸ் எம்பி திருமதி சுப்ரியா சுலே நன்றி தெரிவித்துள்ளார்.

*பரம்வீர் சக்ரா* (6)

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் வெற்றியை நாம் கொண்டாடி வரும் வேளையில், இந்திய பாதுகாப்பு படையினரின் வீரத்தை நாடே போற்றுகிறது. பாதுகாப்பு படையினருக்கு புகழாரம் சூட்டும் வகையில் ஆகாஷ்வாணி செய்திப்பிரிவு சிறப்பு தொடர் ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில்

கார்கின் போரின் போது வீரச் செயல் புரிந்து, பரம்வீர் சக்ரா விருது பெற்ற ரைபிள் மேன் சஞ்சய் குமார் குறித்து ஒரு செய்தித் தொகுப்பு ....

வாய்ஸ்

*பிரதமர்* (9)

முன்னாள் பிரதமர் திரு எச் டி தேவகவுடாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து பிரதமர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், திரு எச் டி தேவகவுடாவின் அரசியல் அணுகுமுறையும், பொது சேவை மீதான அவரது ஆர்வத்திற்காகவும் அவர் மக்களால் பெரிதும் மதிக்கப்படுவதாக தெரிவித்துள்ளார். திரு. எச். டி தேவகவுடாவின் அறிவாற்றலும், பல விஷயங்களை கையாண்ட விதமும் பலத்தை தருவதாக பிரதமர் கூறியுள்ளார். அவர் நீண்ட வாழ்க்கையை வாழ வேண்டும் என்றும் பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

*அருங்காட்சியக தினம்* (8)

சர்வதேச அருங்காட்சியக தினம் இன்று கொண்டாடப்படுகிறது. கலாச்சார பரிமாற்றம், கல்வி மற்றும் சமூக வளர்ச்சியில அருங்காட்சியகங்களின் முக்கிய பங்கை எடுத்துக் காட்டும் வகையில் மே மாதம் 18 ஆம் தேதி சர்வதேச அருங்காட்சியக தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான கருப்பொருள் வேகமாக மாறி வரும் சமூகங்களில் அருங்காட்சியகங்களின் எதிர்காலம் என்பதாகும். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு....

(வாய்ஸ் )

*அருங்காட்சியக தினம் வாய்ஸ் (11)*

1977 ஆம் ஆண்டு சர்வதேச அருங்காட்சியக கவுன்சிலால், இத்தினம் நிறுவப்பட்டது. இது பாரம்பரியத்தை பாதுகாப்பதற்கும், அமைதியை ஊக்குவிப்பதற்கும் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. உலக அளவில் அருங்காட்சியகங்களை ஒருங்கிணைத்து கலாச்சார பரிமாற்றம் மற்றும் கல்வியில் அவற்றின் பங்கு குறித்த விழிப்புணர்வை நோக்கமாக கொண்டு இந்நாள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1978 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் தேதி முதல் 22 நாடுகளில் இது கொண்டாடப்பட்டு வருகிறது. சர்வதேச அருங்காட்சியக தினத்தை முன்னிட்டு இன்று நாடு முழுவதிலும் உள்ள அனைத்து நினைவு சின்னங்கள் மற்றும் அருங்காட்சியகங்களுக்கு அனுமதி இலவசம் என்று இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

*அமித்ஷா* 1(16)

கலைக்கப்பட்ட தொடக்க வேளாண் கடன் சங்கங்களை மீண்டும் உயிர்ப்பித்து, கொள்கைக்கான திட்டங்களை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித்ஷா அறிவித்துள்ளார். குஜராத் மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ள அவர் இன்று அகமதாபாத்தில் உள்ள அறிவியல் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுறவு மாநாட்டில் பங்கேற்று பேசினார். தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் புத்துயிர் பெறுவதன் மூலம் நாட்டில் கூட்டுறவு உள் கட்டமைப்பை வலுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

வரும் 2029 ஆம் ஆண்டிற்குள் நாடு முழுவதிலும் உள்ள ஒவ்வொரு பஞ்சாயத்திலும் தொடக்க வேளாண் கடன் சங்கங்களை நிறுவ அரசு இலக்கு நிர்ணயித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். கூட்டுறவு நிறுவனங்களுக்கு இடையே ஒத்துழைப்பு அவசியம் என கூறிய அவர், கூட்டுறவு நிறுவனங்களுக்காக 11 ஆயிரம் கோடி ரூபாய் வைப்பு தொகையை அதிகரிக்க முயற்சி எடுத்து வருவதாக கூறினார். இந்த நிகழ்ச்சியில், குஜராத் மாநிலத்தை சேர்ந்த 4 ஆயிரம் கூட்டுறவு சங்கங்களை சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றனர்.

அமித்ஷா 2(8)

குஜராத் மாநிலத்திற்கு 2 நாள் பயணம் மேற்கொண்டுள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று பிற்பகல் குஜராத்தின் மெஹ்சானா மாவட்டத்தில் உள்ள கோஜாரியாவில் புதிதாக கட்டப்பட்ட கே கே பட்டேல் நர்சிங் கல்லூரியின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்து பேசினார். நர்சிங் கல்லூரியில் அதிகரிக்கப்பட்டுள்ள வசதிகளால் அருகில் உள்ள பல ஏழை நோயாளிகள் பயனடைவார்கள் என அவர் தெரிவித்தார். ஆயுஷ்மான் பாரத் திட்டத்தை நாட்டின் 60 கோடி மக்கள் பயன்படுத்தி வருவதாக அவர் கூறினார்.

ஜெய்சங்கர் (6)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் நாளை முதல் 6 நாள் பயணமாக நெதர்லாந்த், டென்மார்க் மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு செல்ல உள்ளார். அவரது இந்த பயணத்தின் போது, இந்த 3 நாடுகளின் தலைவர்களையும், சந்தித்து, இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர நலன்சார்ந்த உலகலாவிய விஷயங்கள் குறித்து பேச இருப்பதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

டிரம்ப் (9)

உக்ரேனில் போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்து விவாதிக்க ரஷ்ய அதிபர் விளாடிமின் புடின், உக்ரேன்அதிபர் திரு ஜெலன்ஸ்கி மற்றும் நேட்டோ தலைவர்களுடன் நாளை தொலைபேசியில் பேச திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில், இந்த பேச்சுவார்த்தை போர் நிறுத்தம் மற்றும் வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார். 30 நாள் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக் கொள்ளும்படி ஐரோப்பிய தலைவர்கள் ரஷ்யாவை வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.